செ. கு. எண்: 148 நாள்:10.08.2020

**<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K. பழனிசாமி அவர்களின் அறிக்கை – 10.8.2020</u>**

கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், நீண்டகரை–பி கிராமத்தில், 8.8.2020 அன்று கடல் சீற்றத்தின் காரணமாக கடல் நீர் ஊருக்குள் புகுந்ததில், திரு.மரியதாஸ் என்பவருடைய வீட்டின் காம்பவுண்ட் சுவர் இடிந்து விழுந்து, அவருடைய மகன் திரு. பிரதீப் அஸ்வின் என்பவர் பலத்த காயமடைந்து மருத்துவமனைக்குச் செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகுந்த வேதனையடைந்தேன்.

காம்பவுண்ட் சுவர் இடிந்து விழுந்ததில் உயிரிழந்த திரு. பிரதீப் அஸ்வின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்துயரச் சம்பவத்தில் திரு.லிஸ்டன் என்பவரது மகன் செல்வன் லிபின் மற்றும் திரு.சிலுவை என்பவரது மகன் செல்வன் விதுல் ஆகிய இருவரும் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் இருவரும் விரைவில் பூரண குணமடைந்து வீடு திரும்பவேண்டும் என்று இறைவனிடம் பிரார்த்திக்கிறேன்.

மேற்கண்ட சம்பவத்தில் உயிரிழந்த திரு. பிரதீப் அஸ்வின் குடும்பத்திற்கு 4 லட்சம் ரூபாய் மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**